**O.S.No. 104/2015**

**Date 07.02.2025**

**வா.சா.2 ரவீந்தரன்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். வாதியின் பூர்வீகம் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. வாதியின் முந்தைய வாழ்க்கை குறித்து எனக்கு தெரியாது. வாதியின் முதல் திருமண வாழ்க்கை குறித்து கேட்டு தெரிந்து கொண்டேன். கோபாலகிருஷ்ண நாடார் என்பவர் பஞ்சவர்ணம் என்பவரை திருமணம் செய்து 1ம் பிரதிவாதி பிறந்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கோபாலகிருஷ்ண நாடாருக்கும் பஞ்சவர்ணம் என்பவருக்கும் விவாகரத்து ஆகவில்லை என்றால் சரிதான். தானாக விலகி போய்விட்டார். மேற்படி கோபாலகிருஷ்ணநாடார், அவரது சகோதரர்கள் கூட்டுகுடும்பமாக இருந்தார்கள் என்றால் தனியாக தான்இருந்தார்கள். மேற்படி கோபாலகிருஷ்ணநாடார் மற்றும் 2,3,4 பிரதிவாதிகளுக்கு இடையில் பாகம்பிரித்து சுமார் 26 ஆண்டுகள் இருக்கும். மேற்படி நபர்கள் 26 ஆண்டுகாலமாக தனியாக சொத்துக்களை அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். வாதியின் முதல் கணவர் பெயர் ஆரோக்கியசாமி என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. வாதிக்கு முதல் திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைகள் பெயர் குறித்து எனக்கு தெரியும். ராஜா, பிரபாகரன் என்ற இருவர் உள்ளனர். மேற்படி ராஜாவிற்கு 24 வயது ஆகிறது. வாதியின் திருமணத்தின் நான் நேரடியாக செல்லவில்லை என்றால் சரியல்ல. 1998, 1999 ஆண்டு வாக்கில் மேற்படி வாதிக்கு கோபாலகிருஷ்ணநாடாருடன் திருமணம் நடைபெற்றது. 1998–99 ல் வாதி திருமலாபுரம் கிராமத்தில் வாதி குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. உங்கள் சமுதாயத்தின் மூலம் திருமணம் செய்து வைத்தால் ஊர்காசு என்று வசூல் செய்யப்பட்டு, யார் யார்கிடையில் திருமணம் நடைபெற்றது என எழுதி வைக்கும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். 2006 முதல் உள்ளது. எந்த வருடத்தில் இருந்து அவ்வாறான பழக்கம் அமலில் இருந்தது குறித்து ஊர்நாட்டமையை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

முருகேஸ்வரியும் அவரது தாயாரும் கொடைகானல் எஸ்டேட்டில் வேலை பார்த்து வந்து, அவ்வப்போது ஊருக்கு வருவார்கள் என்றால் சரிதான். 2, 3, 4 பிரதிவாதிகளுடன் எனக்கு பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கும் 2,3, 4 பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் எந்தவித பேச்சுவார்த்தை கிடையாது என்றாலும், சமூக உறவு கிடையாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் நல்லது கெட்டதுக்கான போக்குவரத்து கிடையாது என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் உறவினர்கள் என முதல் விசாரணையில் கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. மேற்படி கோபாலகிருஷ்ண நாடாரும், பஞ்வர்ணம் என்பவரும் பிரிந்தே இருக்கிறார்கள் என்று சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ணநாடாருக்கும் வாதிக்கும் திருமணம் நடந்தது என்று சொல்லுவதும் தவறானது என்றாலும், அவ்வாறான திருமணம் எதுவும் அவர்களுக்கிடையில் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. கோபாலகிருஷ்ணநாடார் வீட்டில் வாதி மனைவி என்ற ஸ்தானத்தில் குடியிருந்து வருகிறார் என்று சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. திருமலாபுரம் இந்துநாடார் கமிட்டியில் யாதொரு பொறுப்பிலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் ஊர் கோவில் கொடை மற்றும் கும்பாபிஷேகம் நடந்ததற்கு வாதி வரி கொடுத்தாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. உங்கள் நாடார் சமூகத்தில் உங்கள் ஊரில் கோபாலகிருஷ்ணநாடார், பஞ்சவர்ணம், முத்தம்மாள் பெயரில் பரவலாக ஊருக்கு 4,5 நபர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றாலும், பிரதிவாதிகளின் மீதுள்ள தனிப்பட்ட வன்மத்தின் காரணமாக வாதியுடன் வஞ்சகூட்டு சேர்ந்து உண்மைக்கு புறம்பமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**